## உத்தமர் ஓமாந்தூரார் குறித்த வரலாற்றுச் செய்திகள்

1895 பிப்ரவரி 1 ஆம் தேதி திண்டிவனம் அருகே உள்ள ஓமந்தூரில் பிறந்தார் [ஜய—தை—20 வெள்ளிக்கிழமை]

1901 ஓமந்தூரில் பள்ளிப்படிப்பு ஆரம்பம்

1905 திண்டிவனத்தில் உயர்நிலைப்படிப்பு

1908 தகப்பனார் பெயர் முத்துராம ரெட்டியார், தாயார் பெயர் அரங்கநாயகி, தந்தை மறைவுக்குப்பின் திண்டிவனத்தில் படிப்பை முடித்துக் கொண்டு குடும்பத்தலைவராக ஓ.பி.ஆர் பொறுப்பேற்றார். விவசாயத்தில் ஆர்வம் காட்ட ஆரம்பித்தார்.

1910 திருமணம், மனைவியின் பெயர் சிங்காரத்தம்மாள்

1913 தாயார் அரங்கநாயகி அம்மாள் மறைந்தார்.

1916 மகன் சுந்தரம் பிறந்தார்.

1919 பெண் குழந்தை பிறந்து 27வது நாளில் இறந்தது. அதே ஆண்டில் காங்கிரசில் சேர்ந்தார்.

1920 நாகபுரியில் [சேலம் சி.விஜயராகவாச்சாரியார் தலைமையில்] நடைபெற்ற காங்கிரஸ் மகா சபை மாநாட்டுக்கு நண்பர்களுடன் சென்றார். தென் ஆற்காடு மாவட்ட அரசியல் மாநாட்டை விழுப்புரத்தில் நடத்தப் பெரிதும் காரணமாக இருந்தார்.

1921 கடலூரில் டாக்டர் அன்னி பெசன்ட் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பிரம்ம ஞானசபை மாநாட்டுக்குச் சென்று அங்கு அம்மையாரைச் சந்தித்தார்.

1921 திண்டிவனம் காங்கிரஸ் கமிட்டித் தலைவரானார்.

1923 கிராமங்களில் தூய வாழ்க்கைப் பயிற்சி நிலையங்கள் தொடங்கி கதர்ப்பிரச்சாரமும் நன்னடத்தைப் பிரச்சாரமும் செய்தார்.

1926 தீவிர காங்கிரஸ்வாதி ஆனார்.

1927 தென் ஆற்காடு மாவட்டக் கழகத் தேர்தல்களில் ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர் இராமச்சந்திரப் படையாச்சியை எதிர்த்துப் பிரச்சாரம் செய்து அவரை ஓபிஆர் தோற்கடித்துப் புகழ்பெற்றார்.

1928 மகன் சுந்தரம் பெங்களூரில் இறந்தார்.

1930 மாவட்டக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1937 வரை அப்பதவியை வகித்தார். விருத்தாசலம் வட்டம் நல்லூர் என்னும் ஊரில் 144 விதிப்படி தடை உத்தரவை மீறியதற்காகக் கைது செய்யப்பட்டார். முதல் முறையாக வடலூர் சென்றார்.

1931 காந்தி இர்வின் உடன்பாடு ஏற்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

1932 காந்தி இர்வின் உடன்பாடு தோல்வியடைந்ததின் விளைவாக, விழுப்புரத்தில் சீமைத்துணி விற்பனை செய்த ஜவுளிக்கடைகளின் முன்பாக ஓபிஆர் தொண்டர்களைத் திரட்டி மறியல் செய்தார். சட்டமறுப்பு இயக்கத்தில் கலந்து கொண்டதற்காகக் கடலூரிலுள்ள மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டால் தண்டிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

1936 ஜில்லா போர்டுகள் [எனப்பட்ட மாவட்டக் கழகங்களுக்கு] தேர்தல்—ஜஸ்டிஸ் கட்சியின் கோட்டையாக இருந்த தென்ஆர்க்காடு மாவட்டத்தில் காங்கிரஸ் கட்சி ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்றக் காரணமாக இருந்தார். புதுச்சேரியில் கிராம்பு சத்தியாக்கிரகம் நடத்தினார்.

1937 தமிழ்நாடு காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு உறுப்பினர் ஆனார். மாகாண சட்டசபைத் தேர்தல்களில் முழு மூச்சுடன் ஈடுபட்டார். வத்தலக்குண்டு மாநாட்டில் தமிழ்நாடு அரசின் துணைத் தலைவர் ஆனார்.

1938 தென் ஆற்காடு மாவட்டம் நிலச்சுவான்தார் தொகுதி இடைத்தேர்தலில் சென்னை மேல்சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1940 தனி நபர் சத்தியாக்கிரகத்தை நடத்தியதற்காக ஓமந்தூரில் கைது செய்யப்பட்டார்.

1942 வெள்ளையனே இந்தியாவை விட்டு வெளியேறு இயக்கத்தில் கைது செய்யப்பட்டார். அடுத்த மூன்று ஆண்டுகள் தஞ்சாவூர் திருச்சி சிறைகளில் கழிந்தன.

1946 சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னை மாகாண சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் தலைவராக திரு.டி.பிரகாசம் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர் முதலமைச்சரானார். ஓபிஆர் சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியின் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். விவசாய அமைச்சர் பொறுப்பை ஏற்கும்படி பிரகாசம் கேட்டுக் கொண்டதை ஏற்க மறுத்தார்.

1947 மார்ச் 23 சென்னை மாகாணத்தின் பிரதமராகப் பதவி ஏற்றார். ஆகஸ்டு 15 இந்தியா சுதந்திரம் பெற்றது. அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினரானார்.

1948 ஹைதராபாத் சமஸ்தானம் சுதந்திர இந்தியாவுடன் இணைவதற்கு அரும்பாடுபட்டார். செப்டம்பர் 9—ஆம் நாளில் போலீஸ் நடவடிக்கையால் ஹைதராபாத் சமஸ்தானம் இந்தியாவின் ஒரு பகுதியாயிற்று.

1949 ஏப்ரல் 6 முதலமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

1950 திரு.பி.எஸ்.குமாரசாமி ராஜாவை முதலமைச்சர் ஆக்கினார். அதே ஆண்டில் இவர் வடலூரில் நிலம் வாங்கினார்.

1952 சட்டசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி ஆட்டம் கண்டது. கட்சியின் நலனை முன்னிட்டு, இராஜாஜியை முதலமைச்சராக்க ஓபிஆர் மிகவும் காரணமாக இருந்தார். அரசை நடத்துவதில் ஓபிஆருடைய ஒத்துழைப்பை வேண்டி, இராஜாஜி இவரைச் சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமனம் செய்தார்.

1953 மேலவைத் தலைவராக இருக்கும்படி இராஜாஜி கேட்டுக் கொண்டும் இவர் அப்பதவியை ஏற்க மறுத்தார். இவர் விரும்பியவாறு டாக்டர் வி.பி.செரியனை மேலவைத் தலைவராக்க இராஜாஜி இசைந்தார். வடலூர்ப் பகுதியில் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளர்ச்சி செய்து, வடலூர்ப் பகுதியை நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தின் திட்டத்திலிருந்து விலக்க முயன்று வெற்றி கண்டார். செங்கற்பட்டு மாவட்டம் மீஞ்சூரில் நடைபெற்ற சென்னை மாகாண விவசாயிகள் மாநாட்டைத் திறந்து வைத்துச் சிறப்புரை ஆற்றினார்.

1953 சிறுவந்தாடு என்னும் சிற்றூரில் ஓமந்தூரார் ஆஸ்பத்திரியை முதலமைச்சர் இராஜாஜி திறந்து வைத்தார்.

1955 வடலூரில் மணிவிழா நடைபெற்றது. ரெட்டியார்கள் குழு, மணிவிழாவில் இவருக்கு வழங்கிய பணமுடிப்பு ரூ.60,000/—யைக் கொண்டு வடலூர்ப் பணிகளுக்கு வாங்கிய நிலங்களைச் செம்மைப்படுத்தினார்.

1958 உறவினர்கள் வீடுகளுக்குச் செல்வதைத் தவிர்த்த அவர் வடலூர் சுத்த சன்மார்க்க சேவாசிரமக் கட்டிடங்கள் திறப்பு விழா நடத்தினார்.

1962 முழுமையாக அரசியலிலிருந்து விலகிக் கொண்டார்.

1964 சட்டமன்ற மேலவை உறுப்பினராக ஆளுநரால் நியமிக்கப் பட்டார். ஆனால் இவர் அப்பதவியை ஏற்கவில்லை.

1967 கோயம்புத்தூரில் விவேகானந்தர் நூற்றாண்டு விழாவுக்குத் தலைமை தாங்கினார்.

1969 தொழில் அதிபர் பொள்ளாச்சி திரு.நா.மகாலிங்கம் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழுவினரிடம் 11.06.1969இல் வடலூர் பணிகளை ஒப்படைத்தார்.

1970 அறுபடை வீடுகளுக்கு யாத்திரை சென்றார். ஆகஸ்டு 25 சென்னையில் காலமானார். ஆகஸ்டு 26 வடலூரில் சமாதி வைக்கப்பட்டது, அக்டோபர் 10 சமாதி திருக்கோயில் திறப்பு விழா.

2010 25.08.2010 மத்திய அரசாங்கம் இவருக்குத் தபால் தலை வெளியிட்டது.

2013 ஓமந்தூரில் மணிமண்டபம் கட்டித் திறப்பு விழாவினை அரசு நடத்தியது.

## 1. நம்ம ஊரு படேல்

நாடு சுதந்திரம் அடைந்த போது 500க்கும் மேற்பட்ட சமஸ்தானங்கள், நிலப்பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் பல சிறியவை, சில பெரியவை. அத்தகைய பெரிய மன்னராட்சி நடைபெற்ற சமஸ்தானம் ஹைதராபாத், காஷ்மீர் கூட இணைந்து விட்டது. தென்னகத்தின் நுழைவாயிலான ஹைதராபாத் நிஜாம் ஓசாம் அலிகான் ஆறாம் அசஃப் ஜான் ஓராண்டிற்கும் மேலாகவே சிறிதும் வளைந்து கொடுக்காமல் இருந்து வந்தார்.

பண பலமும் ரஜாக்கர்கள் என்ற முஸ்லீம் படைகளையும் வைத்துக்கொண்டு கொடுங்கோன்மை ஆட்சி நடத்தி வந்தார். மக்கள் அடைந்த துயரம் சொல்லி மாளாது.

இந்த நேரத்தில் அவருக்குப் பாகிஸ்தான் அரசு நேரடியாகவும் மறைமுகமாகவும் பல உதவிகளைச் (ஆயுத உதவி உட்பட) செய்து வந்தது, ராஜாஜி அப்போது கவர்னர் ஜெனரல், அவர் ஹைதராபாத் கொடுத்து வந்த தொல்லையை “வயிற்றில் வந்த புற்றுநோய்” என்று விவரித்தார். எப்படியாவது நிஜாம் அரசின் கொட்டத்தை ஒடுக்க வேண்டும் என்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் துணிந்து நடவடிக்கை எடுக்க முதல் காரணமாயிருந்தவர் நம் தமிழகத்தைச் சேர்ந்தவர் என்றால் நமக்கு எவ்வளவு மகிழ்ச்சி!

அப்பொழுது சென்னை மாகாணத்தின் பிரதமராக (பின்னர் தான் முதல்வர் என்று பெயரிடப்பட்டது) இருந்தவர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், அப்பழுக்கற்ற தேசபக்தர். தன்னுடைய 17ம் வயதில் இருந்தே விடுதலை இயக்கத்தில் இணைத்துக் கொண்டவர். எளிய விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். கட்சியில் காந்தி, ஜவஹர்லால் நேரு, ராஜாஜி என்று எல்லோராலும் பாராட்டப்பட்டவர். இருப்பினும் கட்சியையும், தொடர்புகளையும் சுயலாபத்திற்குப் பயன்படுத்தாத நேர்மையாளர். இக்கட்டான சூழ்நிலையில் காங்கிரசைக் காப்பாற்ற இவர்தான் சரி என்ற மூத்தோர்களின் ஏகோபித்த ஆதரவுடன் 1947 மார்ச் 23 அன்று சென்னையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

அந்த நேரத்தில் 1948 ஜூலை, ஆகஸ்டில் திரு. ஓமந்தூர் ராமசாமி அவர்களுக்குச் சில தகவல்கள் கிடைத்தன. அவை கவலை அளிக்கக் கூடியவை. பாகிஸ்தான் தன்னுடைய விமானங்களையும், படைகளையும் ஹைதராபாத்திற்கு அனுப்பி, பாரத அரசுக்கு எதிராகக் கலகம் விளைவிக்கத் தயாராக இருப்பதாக, சென்னை முதல்வருக்கு தகவல் கிடைத்தது. உடனே அவர் தொலைபேசியில் வல்லபாய் படேலைத் (அன்றைய உள்துறை அமைச்சர்) தொடர்பு கொண்டார். பாகிஸ்தான் அரசின் சதித்திட்டம் விரைவாக முறியடிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

எவ்வளவு தேவையோ அத்தனை வீரர்களைத் தமிழகக் காவல் துறையிலிருந்து அனுப்பத் தயாராக இருப்பதாக உறுதியளித்தார். படேலும் களத்தில் இறங்கி “ஆபரேஷன் போலோ” என்று பெயரிடப் பட்ட நடவடிக்கை மூலமாக நிஜாமின் கொட்டத்தை அடக்கினார். ஹைதராபாத் சமஸ்தானம் பாரத நாட்டுடன் இணைக்கப்பட்டது.

படேல், சென்னை முதல்வரை வெகுவாகப் பாராட்டினார். ஆனால் இவையெல்லாம் சரித்திரப் புத்தகத்தில் இடம் பெறாமல் போனது. வல்லபாய் படேலையே மறக்கடிக்கச் செய்தவர்களுக்கு ஓமந்தூரார் எம்மாத்திரம்?

## 2. தமிழக அரசின் சின்னம்!

ஒவ்வொரு மாநில அரசும் ஒரு சின்னத்தைக் கொண்டிருந்தால் சிறப்பாக இருக்கும் என்ற எண்ணத்தில் சென்னை அரசாங்கத்துக்கு ஒரு முத்திரையை உருவாக்க ஓமந்தூரார் யோசித்தார்.

அந்த யோசனையின் பயனால் சிறந்த கட்டிடக் கலைநுட்பங்கள் நிறைந்ததும், தமிழ்நாட்டிலேயே மிக உயரம் கொண்டதுமான ஸ்ரீவில்லிப்புத்தூர்க் கோயிலின் கோபுரத்தை அரசு முத்திரையாக்க ஓமந்தூரார் முடிவு செய்தார்.

இந்த விஷயத்தை அறிந்த சில நாத்திகத் தலைவர்கள், நாத்திகரான பிரதமர் ஜவஹர்லால் நேருவுக்கு இதுகுறித்து ஒரு புகார்க் கடிதம் எழுதினார்கள். “சமயச் சார்பற்ற ஒரு மாநில அரசின் இலச்சினையாக இந்துமதக் கோயிலின் கோபுரத்தைப் பயன்படுத்தலாமா? என்று அக்கடிதத்தில் ஒரு கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. அப்பிரச்சனை குறித்து ஓமந்தூராரிடம் விளக்கம் கேட்டு நேரு எழுதிய கடிதத்தில், அந்தக் கேள்வியையே முக்கியமாகக் குறிப்பிட்டிருந்தார்.

அக்கடிதத்திற்கு ஓமந்தூரார் விளக்கமளித்து எழுதிய பதில் கடிதத்தின் சாரம் இதுதான்.

கோபுரம் என்பது சமயச் சின்னம் மட்டும் அன்று. அது தமிழ்ப்பண்பாட்டின் சின்னம். எங்கள் மாநிலத்தின் தனிச்சிறப்பாக உலகம் போற்றும் திராவிடக் கட்டிடக்கலையின் அடையாளம். காந்தியடிகளின் இனிய நண்பரும், கிறித்துவப் பெருமகனாருமான மேனாட்டார் சி.எஃப் ஆண்ட்ரூஸ் என்ற வணக்கத்துக்குரிய மதகுருவின் ஆதரவுடன் வடஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் கோபுரத்துடன் கூடிய தேவாலயம் கட்டப்பட்டிருப்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதற்குப்பிறகு அப்பிரச்சனை குறித்து நேரு எதுவும் பேசவில்லை. அரசாங்கச் சின்னம் தொடர்பான பிரச்னையை மதத்துடன் தொடர்புப்படுத்தி, பெரிய பிரச்னையாக எழுப்ப நினைத்தவர்கள், அது ‘சின்னப் பிரச்னை’யாக முடிந்தது கண்டு ஏமாந்து போனார்கள்!

கோபுரச் சின்னத்தின் கீழே ‘சத்தியமேவ ஜெயதே’ என்ற வாசகத்தையும் ஓமந்தூரார் பொறிக்கச் செய்தார். பிற்காலத்தில் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற பேரறிஞர் அண்ணா, அதனை ‘வாய்மையே வெல்லும்’ எனத் தமிழில் மொழிமாற்றம் செய்தார்.

## 3. தவறான ஒப்பீனியன்

ஓமந்தூரார் எழுதும் ஆங்கிலத்தில் சில பிழைகள் இருக்கும் அதற்காக அவர் வெட்கப்பட்டதோ, வருந்தியதோ இல்லை. இன்னொருவரின் உதவியை நாடுவதும் இல்லை.

ஒருமுறை இந்திய அரசாங்கம் ஒரு பிரச்சனையில் மாநில

முதல்வர் என்ற வகையில் ஓமந்தூராரிடம் கருத்துக் கேட்டுக் கடிதம் எழுதியிருந்தது. அக்கடிதத்திற்குப் பதில் எழுதிய ஓமந்தூரார், "இன் மை ஒப்பீனியன்" என்று எழுதி, தனது பதில் கருத்தை ஆங்கிலத்தில் பதிவு செய்திருந்தார். அதில் 'ஒப்பீனியன்' என்ற ஆங்கிலச் சொல்லில் ஒரு எழுத்துப்பிழை இருந்ததைக் கவனித்த அவருடைய நேர்முகச் செயலாளர் பி.பி கிருஷ்ணய்யர் என்பவர், அதனைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

"பரவாயில்லை, நான் எழுதியபடியே டைப் அடித்து அனுப்பி விடுங்கள். அவர்கள் எனது ஒப்பீனியனைத்தான் கேட்கிறார்கள். ஒப்பீனியன் என்ற வார்த்தைக்கு 'ஸ்பெல்லிங்' தெரியுமா என்று கேட்கவில்லையே!" என்று கூறிவிட்டாராம்.

## 4. மருத்துவரிடத்தில் எச்சரிக்கை

முதலமைச்சருக்கு வேண்டியவர், நெருக்கமானவர் என்ற வகையில் தன்னை முன்னிறுத்தி, யாரும் எந்தச் சலுகையையும் பெற்றுவிடக் கூடாது என்பதில் கவனமாகச் செயல்பட்டார்.

முதலமைச்சராகப் பதவி ஏற்றபின், தனக்கு மருத்துவம் செய்து கொள்ளவும், அவ்வப்போது, தன் உடல்நிலையைப் பரிசோதித்துக் கொள்வதற்கெனவும் டாக்டர் ரத்னவேலு சுப்ரமணியன் என்பவரை நியமிக்க விரும்பினார். சென்னை பொது மருத்துவனையில் உடற்கூறு மருத்துவராகப் பணியாற்றிய அவர், அன்றைய புகழ்மிக்க டாக்டர். டாக்டர் ரத்னவேலு சுப்ரமணியத்துக்குத் தகவல் தெரிவிக்கப் பட்டது. அவர், உடனே கூவம் மாளிகைக்கு வந்து முதலமைச்சரைச் சந்தித்தார்.

"எனது தனிப்பட்ட மருத்துவராக உங்களை நியமிக்க விரும்புகிறேன்!" என ஓமந்தூரார் அவரிடம் சொல்ல, அவரும் "இப்பணி எனக்கு மனநிறைவைத் தரும் பொறுப்பு, சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிறேன்" என்றார். அதற்குப் பிறகு, தனது பிரத்தியேக மருத்துவராக, டாக்டர் ரத்னவேலு சுப்ரமணியத்தை நியமிப்பதற்காக, அவரிடம் ஓமந்தூரார் மூன்று நிபந்தனைகளை விதித்தார், அவை :

1. நீங்கள் எப்போதும் யாருக்காகவும் என்னிடம் எவ்விதமான சிபாரிசும் செய்யக்கூடாது.
2. அரசு மருத்துவராகப் பணிபுரியும் உங்களுக்காக என்னிட மிருந்து எந்தவிதமான பதவி உயர்வையோ சலுகையையோ எதிர்பார்க்கக்கூடாது.
3. மருத்துவப்பணி தவிர, என்னுடன் அரசியல் விவகாரங்களைப் பற்றிப் பேசக்கூடாது.

மூன்று நிபந்தனைகளையும் ஒப்புக் கொண்ட பிறகே, டாக்டர் ரத்னவேலு சுப்ரமணியனின் நியமனத்தை ஓமந்தூரார் உறுதி செய்தார்.

## 5. ஓசிக்கார் வேண்டாம்!

முதலமைச்சராக ஓமந்தூரார் பதவி ஏற்றபின் முதல் தடவையாக டில்லிக்குச் சென்றிருந்தார். அக்காலத்தில் நமது மாநில அரசுக்கு

டில்லியில் பிரத்தியேகமான தங்கும் விடுதி கிடையாது. வாகனமும் இல்லை. இந்திய அரசு ஒதுக்கியிருந்த "வெஸ்டர்ன் கோர்ட்" மாளிகையில் ஓர் அறையில் தான் அவர் தங்கினார்.

டில்லி விமான நிலையத்தில் அவர் போய் இறங்கியதும், வெளியில் அவருக்காக ஒரு சொகுசுக் கார் காத்திருந்தது. அந்தக் கார் டிரைவர் வேகமாக ஓமந்தூராரிடம் ஓடி வந்தார். "அய்யா சொல்லி உங்கள் டில்லி பயணத்துக்காக இந்தக் காரைக் கொண்டு வந்திருக்கிறேன். டில்லியில் இருக்கும்வரை உங்களுக்காக ஓட்டச் சொன்னார்கள். பெட்ரோலுக்குத் தேவையான பணமும் அவர்களே கொடுத்துவிட்டார்கள்!" என்றார் பவ்யமாக.

"இல்லை, எனக்குக் கார் வேண்டாம்!" என மறுத்துவிட்ட ஓமந்தூரார், உடன் வந்த தனது உதவியாளர் சடகோபனிடம் சொல்லி, வாடகைக் காரைக் கொண்டு வரச் செய்தார். நாளொன்றுக்கு ரூபாய் 100 வரை கார் வாடகைக்காகத் தனது சொந்தப் பணத்திலிருந்தே செலவு செய்தார்.

"ஓசிக்காரில் ஏறுவானேன்? பிறகு அவர் வந்து சலுகைகள் கேட்பார். சிபாரிசு செய்யச் சொல்லுவார். நாமும் தாட்சண்யப்பட வேண்டும். இந்த வம்பே வேண்டாம் எனத் தன்னிடம் அப்போது கூறியதாக, ஓமந்தூராரின் உதவியாளர் சடகோபன் பின்னர் தெரிவித்த தகவல் இது.

## 6. ஆங்கிலக் கொடியை இறக்கு

1927 ஆம் ஆண்டு பண்ருட்டியில் தமிழ்நாடு வன்னியர்கள் மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் கலந்து கொள்ள அன்றைய சென்னை இராஜதானியின் முதலமைச்சர் டாக்டர். ப.சுப்பராயன் அழைக்கப்பட்டிருந்தார்.

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் சின்னமாகிய யூனியன் ஜாக் கொடியை ஏற்றி வைத்து, முதலமைச்சர் சுப்பராயன் உரை நிகழ்த்து வதாக நிகழ்ச்சி நிரலும் அச்சிடப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டது.

அதைக்கண்டு, ஓமந்தூரார் வெகுண்டெழுந்தார். வன்னியர்கள் மாநாட்டில் ஆங்கிலக் கொடியை ஏற்றுவதா எனக்கொக்கரித்தபடி வன்னியச் சமூக இளைஞர்களையெல்லாம் உடனடியாக ஒன்று திரட்டினார். யூனியன் ஜாக் கொடியை ஏற்றக் கூடாதெனத் தடுத்தார்.

அதற்குப் பதிலாக, வன்னியர்க் கொடி அங்கேயே உருவாக்கப் பட்டு, அக்கொடியையே முதலமைச்சர் சுப்பராயனைக் கொண்டு ஏற்றச் செய்தார். இந்த சம்பவம் வன்னியர்களின் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாக இன்றுவரை பேசப்படுகிறது.

## 7. நேருஜியுடன் மோதல்!

ஓமந்தூராருக்கும் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கும் நீதிபதி நியமனம் தொடர்பாக ஓர் உணர்ச்சிகரமான மோதல் ஏற்பட்டது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் 1948இல் ஒரு நீதிபதி பதவி நியமனமின்றி இருந்தது. அந்த இடத்திற்கு அப்போதைய புகழ்பெற்ற கிரிமினல் வழக்கறிஞர் என். சோமசுந்தரம் என்பவரது பெயரைத் தலைமை நீதிபதி சிபாரிசு செய்தார். முதலமைச்சர் ஓமந்தூராரும்

அதை ஏற்றுக் கொண்டார்.

இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்புத்துறை அமைச்சரும், நேருவின் இனிய நண்பருமான என். கோபாலசாமி அய்யங்கார் தன் மருமகன் வி.கே. திருவேங்கடாச்சாரிக்கு, அந்தப் பதவி கிடைக்கும் என எதிர்பார்த்து, கிடைக்காததால் வருத்தமுற்றார். இதுபற்றி நேருவிடம் முறையிட்டார்.

நேரு, ஓமந்தூராரைச் சந்தித்தபோது, நீதிபதி நியமன விவகாரம் பற்றிக் குறிப்பிட்டு, "நீங்கள் பிராமணரல்லாதவர்கள் அரசாங்கத்தைச் சாதி ரீதியாக நடத்தப் பார்க்கிறீர்கள்!" என்று குறை கூறினார்.

அதைக் கேட்டுத் துணுக்குற்ற ஓமந்தூரார், "நான் சிறிதளவுகூட நீங்கள் சொன்ன விதத்தில் அரசாங்கத்தை நடத்தவில்லை. உங்களுடைய வார்த்தைகளை உடனே வாபஸ் வாங்குங்கள் அல்லது இப்போதே என் ராஜினாமாவை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றார் உணர்ச்சி மேலிட.

ஓமந்தூரார் ராஜினாமா செய்தால் பல புதிய அரசியல் விளைவுகளைச் சந்திக்க நேரிடும். அதற்கு நாம் இடம் தரக்கூடாது என நேருவிடம் எடுத்துக் கூறி, ஓமந்தூராரையும் சமாதானப்படுத்தி, அப்பிரச்சனைக்கு அங்கேயே முற்றுப்புள்ளி வைத்தார் வல்லபாய் பட்டேல். இது குறித்து, பின்னாட் களில் நீதிபதி ராஜமன்னார் கூறிய வாக்குமூலம் முக்கியமானது.

"சோமசுந்தரத்தை நியமனம் செய்ததில் பிராமணர்களுக்குக் கோபம். யாராவது ஒரு பிராமணர் அந்த நீதிபதி பதவிக்கு வருவதையே அவர்கள் விரும்பினார்கள். ஆனால் அந்த முடிவுக்கு ஓ.பி.ஆர் எவ்வகையிலும் பொறுப்பு அல்ல. அவர் அவ்விஷயத்தில் தலையிடவே இல்லை. சோமசுந்தரத்தைச் சிபாரிசு செய்தது நான்தான். ஓ.பி.ஆர் பிராமண விரோதி அல்ல. ஆனால், சட்டவிரோதமாக, நீதிக்குப் புறம்பாகப் பிராமணர்களுக்குச் சலுகையும் காட்டமாட்டார். பிராமணர்களுக்கு மட்டுமல்ல. எந்தச் சாதியினருக்கும்தான்".

## முடிவுரை

இவ்வாறு தன்னுடைய வாழ்நாள் முழுவதும் அரசியலிலும், ஆட்சி முறையிலும், தனிவாழ்க்கையிலும் நேர்மை, தூய்மை, எளிமை, முதலியவற்றைக் கடைப்பிடித்து இமயம்போல் நிலையான புகழைப் பெற்றவர் நம் ஓமந்தூரார். அரசியலைத் துறந்த பிறகு வள்ளலார் காட்டிய வாழ்வியல் நெறிகளை முற்று முழுதாகக் கடைப்பிடித்து, அக்குறிக்கோள்களுக்காகவே தன்னுடைய உடல், பொருள், ஆவி முழுவதையும் பயன்படுத்தியவர் நம் ஓமந்தூரார். நம்முடைய இனத்திற்கே பெருமை சேர்த்துள்ள ஓமந்தூர் திரு. இராமசாமி ரெட்டியார் அவர்களை நாமும் நம் வாழ்வின் வழிகாட்டியாகக் கொண்டு நம்மால் இயன்றவரை தொண்டு செய்து வாழ்வோமாக.

உழைப்பால் உயர்ந்த உத்தமர்

## திருச்சி K. ரெங்கராஜன் ரெட்டியார் (K.R.T)

தொழிலதிபரும், தேர்ந்த சிறந்த சமுதாயப் பற்றாளரும், ரெட்டியார் சமுதாயத்தில் தன் அழியாத முத்திரையைப் பதித்தவருமான திரு. K. ரெங்கராஜன் பேராளுமையைக் கொண்டவர். இவர், திருச்சியில் ரெட்டியார் சமூகத்தின் அடையாளமாகவும் வலிமைமிக்க, புகழ்பெற்ற தன்னாட்சி நிறுவனமாகவும் விளங்கும் காவேரி மகளிர் கல்லூரியை "ரெட்டி கல்வி அறக்கட்டளை" மூலம் உருவாக்கிய முன்னோடிகளில் ஒருவர். நெருங்கிய நண்பர்களால் KRT என அன்போடு அழைக்கப்பட்ட K. ரெங்கராஜன், தன் தனித்திறமைகளால், தான் ஈடுபட்ட ஒவ்வொரு துறையிலும் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவராகத் திகழ்ந்தார். எதார்த்த வாழ்வில் தத்துவ ஆழம்மிக்க சிந்தனா சக்தி கொண்டவர். வறுமையின் கடும் வெப்பத்தின் இடையிலும் ஓய்வு ஒழிவில்லாத போராட்டம், ஏழை எளிய மக்களிடத்தில் எல்லையற்ற ஈடுபாடு, உயிருக்கு நிகரான நேசம் என்ற அடிப்படையில் அவர் பிறரிடமிருந்து மாறுபட்டிருந்தார்.

திருச்சி மாவட்டத்தில் பிறந்து மறைந்த K. ரெங்கராஜன் (KRT) திருச்சியில் லாரி உரிமையாளர்கள் சங்கம், பஸ் உரிமையாளர்கள் சங்கம், தமிழ்நாடு ரெட்டி நலச்சங்கத்தின் மாநிலத்தலைவர், திருச்சி காவேரி மகளிர் கல்லூரியை நடத்தி வரும் "ரெட்டி கல்வி அறக்கட்டளை"யின் தலைவர் என அதிகாரமிக்க பல்வேறு பதவிகளை வகித்தவர். இந்த பதவிகளில் தன் வாழ்நாள் முழுக்க சேவையாற்றிப் புகழ்பெற்றவர். திருச்சி மாவட்டத்தின் பிரபல அரசியல் பிரமுகர்கள் தொடங்கி அந்நாளில் இவர் வீட்டிற்கு வராத பிரபலங்களே இல்லை எனும் அளவிற்கு முக்கிய பிரமுகர்களின் அன்பைப் பெற்றவர். இத்துணை சிறப்புகளுடன் நீங்காப் புகழ்பெற்றுத் திகழ்ந்தவர் இவர். தன்மானமும், விடாமுயற்சியும் இருந்தால் எவரும் பெரும் புகழையும், பொருளையும் ஈட்ட முடியும் என்பதற்கு அடையாளமாகத் திகழ்ந்த இவரது வாழ்க்கை இன்று பலருக்கும் ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

## விவசாயப் பின்னணியில் பிறந்த திரு. K.R.T

திரு. K. ரெங்கராஜன் அவர்கள் தலைமுறை, தலைமுறைகளாகவே விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் திருச்சி மாவட்டம், முசிறி வட்டம் கொளக்குடி கிராமத்தில் திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார், பொன்னம்மாள் தம்பதியினருக்கு 10.03.1934 அன்று 4வது குழந்தையாகப் பிறந்தவர். இவரது தந்தை வழி தகப்பனார் [தாத்தா] பெருமாள் ரெட்டியார், தந்தை வழி தாயார்

[அப்பாயி] கிருஷ்ணம்மாள். இவரது தாய் பொன்னம்மாள் பிள்ளாத்துறை கிராமத்தைச் சார்ந்தவர். தாய் வழி தகப்பனார் [தாத்தா] சிதம்பர ரெட்டியார் – பிள்ளாத்துறை. பொன்னம்மாளின் தாயார் அம்மணி அம்மாள் [அம்மாயி] – மாணிக்கபுரம். இவர் கைக்குழந்தையாக இருந்தபோது தாய், தந்தை, தாத்தா, அப்பாயி அனைவரையும் இழந்த நிலையில், அம்மணி அம்மாள் இவரை எடுத்து வளர்த்தார்.

ரெங்கராஜன் வாழ்விலும் சோதனைக் காலம் வந்தது. துரதிஷ்டவசமாக அவர் ஆறுமாதக் குழந்தையாக இருக்கும்போதே தனது தாய் இழந்த நிலையில், அம்மணி அம்மாள் அவர்களும், இவர் ஒன்பது வயதாக இருக்கும்போதே காலமானார். அந்த நாளில் அனாதைக் குழந்தைகளின் நிலை சொல்லிமாளாது. நிலம் வீடு இல்லாத நிலையில் அம்மாவின் தாயார் அம்மணி அம்மாள் [அம்மாயி] கண்காணிப்பில்லாத நிலையில் தாய்மாமா திரு. C.பாப்பு ரெட்டியார் ஆதரவில் தாத்தையங்கார் பேட்டை உட்கிராமம் பிள்ளாத்துறையில் வளர்ந்தார். அங்கிருந்த திருச்சி ஜில்லா போர்டு ஆரம்பப்பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போது தாய்மாமா பாப்பு ரெட்டியார் ரெங்கராஜனுடன், சகோதரர்கள் சீனிவாசன், நடராஜன், அக்கா கிருஷ்ணம்மாள் அனைவரையும் மிகுந்த பாசம் காட்டி வளர்த்து வந்தார். இளைய சகோதரர்K. சீனிவாசன் இலங்கைக்குப் பிழைப்பு தேடிச் சென்றார். மற்றோர் மூத்த சகோதரர் திரு. K. நடராஜன் மட்டுமே உடன் இருந்தார். அவரும் வேலையில்லாமல் இருக்கவே, 7ம் வகுப்பு வரை மட்டுமே படித்த நிலையில் யாருக்கும் சுமையாக இருக்கக்கூடாது என்பதை உணர்ந்து K. ரெங்கராஜன் பிழைப்பு தேடித் திருச்சி வந்தார்.

குறிக்கோளை நோக்கிப் பயணம் செய்யும் பொழுது தடைகள் வருவது இயல்பு. அது எதிர்மறையாகத்தான் இருக்கவேண்டும் என்றல்ல. நல்ல விடயங்களும் சிலபொழுது தடையாக வருவதுண்டு. கைவிலங்கு இரும்பால் இருந்தால் என்ன? பொன்னால் இருந்தால் என்ன? இரண்டும் நம்மைப் பிணைக்கவே செய்யும் என்பார்கள். அதுபோலத் திருச்சியில் K. ரெங்கராஜன் 1949ல் எஸ்.எம்.எஸ் மோட்டார் கம்பெனியில் Helperஆக ஆரம்பத்தில் பணியில் சேர்ந்தார். பின்னர் 1954 முதல் 1959 வரை திருச்சி JVS பஸ் கம்பெனியில் பிட்டர் மெக்கானிக்காகப் பணிபுரிந்தார். அப்போது பல நேரங்களில் அவர் பட்டினி கிடந்தும், உடலை வருத்திக்கொண்டும் தான் செய்த வேலையில் கவனமாகவும், ஈடுபாட்டுடனும் செயல் பட்டார். செய்த வேலையில் தனக்குக் கிடைத்த சம்பளத் தொகையில் சிக்கனமாகச் சேமித்து வைத்திருந்த ரூ.3,500/-யை முதலீடாகக்

கொண்டு 1959ல் முதன்முதலில் "K.R.Transports (KRT)" என்கிற பெயரில் சுயதொழிலைத் தொடங்கினார். தொடங்கும் போது அவருக்குப் பெருமளவில் கையில் முதலீடு இல்லை. எத்தனை தடைகள் வந்தாலும் கொண்ட காரியத்தில் சற்றும் பின்வாங்கக் கூடாது என்று எண்ணிய அவர் தனக்கு உதவி செய்ய மின்னம்பள்ளி ஜமீன்தாரினி தொட்டியத்து அம்மாவிடம் உதவி கேட்டுத் தனது மோட்டார் தொழிலைத் தொடங்கினார். இவரது நேர்மையையும், திறமையையும், கடின உழைப்பையும் அறிந்து கொண்ட ஜமீன்தாரினி அம்மாவும் மனமுவந்து உதவிசெய்தார். தமது செயல் தடைபடாமல் அவற்றைத் தகர்த்து முன்னேறுபவனே வெற்றியாளனாக, சாதனையாளனாக வரமுடியும் என்கிற ஞானம் அவரிடத்தில் இருந்தது. மோட்டார் தொழிலில் எந்தவிதமான பழுதையும் நுணுக்கமாகச் சரிசெய்யும் ஆற்றல் இந்த படிக்காத மேதையிடம் இருந்தது. மோட்டாரில் ஏற்படும் ரிப்பேரைக் கண்ணுற்ற மாத்திரத்தில் அதன் நுட்பத்தைப் புரிந்துகொள்ளும் புத்தி படைத்தவர். இதற்குக் காரணம் அவரது அனுபவம், தொழில் மீது கொண்ட ஆர்வம், தன்னம்பிக்கை, அவரது முழு ஈடுபாடுமே. இதனால்

"மெய்வருத்தம் பாரார் பசி நோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் – செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்"

காரியத்திலேயே கருத்தாக இருப்பவர்கள் தம் உடலின் வருத்தத்தைப் பார்க்க மாட்டார்கள். தன் பசியையும் கவனிக்க மாட்டார்கள், உறக்கத்தைப் பெரிதாக எண்ண மாட்டார்கள். யார் தனக்குத் தீங்கு செய்தாலும் அதைப் பொருட்படுத்த மாட்டார்கள். காலத்தின் அருமையையும் பார்க்க மாட்டார்கள். பிறர் செய்யும் அவமதிப்பையும் கருதமாட்டார்கள் என்று நீதிநெறியில் விளக்கப்பட்ட செய்யுளுக்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டியவர். அதனால் தான் இவர் மோட்டார் தொழிலில் மென்மேலும் வளர்ந்து படிப்படியாக உயர்ந்தார்.

1970ல் பஸ் பர்மிட் பெற விண்ணப்பித்து திருச்சி–குளித்தலை பஸ்ரூட் பெற்றார். அதுவே தற்போது கரூர் வரை நீட்டிக்கப்பட்டு ஓடுகிறது. அதேபோல் மணப்பாறை வரை வாங்கப்பட்ட பஸ் ரூட் நீட்டிக்கப்பட்டு இன்று திண்டுக்கல் வரை ஓடுகிறது. 1973ல் நகரப் பேருந்தைத் தொடங்கினார். பேட்டைவாய்த்தலை பேருந்து சிறப்புக்குரியது. இன்றும் பயணிகள் பலரும் KRT பஸ் வருவதற்காகக் காத்திருப்பதைக் காண முடியும். காரணம் பேருந்தின் பராமரிப்பு, காலம் தவறாமை என்கிறார்கள். 1977ல் ஏற்பட்ட மிகப்பெரிய மழை, வெள்ளத்தால் திருச்சி மாநகரமே நீரில் தத்தளித்தது. வெள்ளம் அபாயநிலையை எட்டியது. அது சமயம் வெள்ளம் பாதித்த பல்வேறு

பகுதிகளில் அரசுக்கு உறுதுணையாக இருந்து சீர்திருத்தப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். நகரத்தில் சாலைகளில் ஏற்பட்ட பள்ளங்களை எல்லாம் தனது லாரிகளின் மூலம் தன்னால் இயன்றளவு இலவசமாக மணல் பரப்பிச் சரிசெய்தார். இதனால் ரெங்கராஜன் தமிழக அரசின் அப்போதைய முதல்வர் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்களிடம் பாராட்டுதலைப் பெற்றார் .

பின்னர் தனது பார்வையை மோட்டார் தொழிலைத் தாண்டி கட்டுமானத் தொழிலிலும் கால் பதித்தார். இதனால் பெரும்பாலான தொழிலதிபர்கள், சிறுதொழில் செய்யும் முதலீட்டாளர்கள், தொழிலாளர்கள், ஏழை, எளிய மக்களின் தொடர்பு பெருமளவில் இவருக்கு அதிகரித்ததோடு, இவருடைய செல்வாக்கும் அதிகரித்தது. ஏராளமான பொதுநலக் காரியங்களில் ஈடுபட்டதால் தன்னுடைய சேமிப்பின் பெரும்தொகையை ஏழை, எளிய மக்களுக்கும், கல்விக்கும் உதவிடுவதில் பெரும் கவனம் செலுத்தினார்.

## மணவாழ்க்கை

தாய்மாமா பாப்புரெட்டியாரின் தூண்டுதல் காரணமாக தமது 27வது வயதில் திருச்சி மாவட்டம்–தாத்தையங்கார்பேட்டை உட்கிராமமான மாணிக்கப்புரம் திரு.துரைசாமி ரெட்டியார் – காமு அம்மாள் தம்பதியரின் மகள் சகுந்தலாவை 23.06.1961 அன்று திருமணம் செய்து கொண்டார். இவரது இனிய இல்லற வாழ்வில் திருமதி. விஜயலட்சுமி, திரு. K. R. வெங்கடேஷ், திரு. K.R. சுரேஷ்குமார், திருமதி. அகிலாண்டேஸ்வரி என்ற இரண்டு மகன்கள், இரண்டு மகள்களைப் பெற்று இவரது இல்வாழ்க்கை மிகச்சிறப்பாக அமைந்தது.

விரைவில் உயர்ந்த நிலைக்கு வருவது பெரிதன்று. எப்போதும் உயர்ந்தபடி இருக்கவேண்டும் அதுவே பெரிது என நினைத்தார் போலும். இதனால் B.E. பட்டதாரியான இவரது இளையமகன் K.R. சுரேஷ்குமார் அவர்களுக்கு ஸ்பிக் கேஸ், அம்மோனியா கேஸ், K.R. Fuels போன்றவற்றை டேங்கர் லாரி சர்வீஸ் மூலம் எடுத்துச்செல்லும் தொழிலைத் தொடங்க ஆலோசனை வழங்கினார். அத்தொழில் தற்போதும் சிறப்பாக வளர்ந்து வருகிறது. 1994ல் பட்டதாரியான தனது மூத்த மகன் திரு. K.R. வெங்கடேஷ் அவர்களுக்கு ஹீரோ ஹோண்டா மோட்டார்ஸ், Spinning Mill நடத்துவதற்கு ஆலோசனை வழங்கி, தொடங்கி வைத்தார். இந்நிறுவனமும் இன்றைய தினம் திருச்சி மாநகரில் பெயர்சொல்லும் நிறுவனமாக வளர்ந்து வருகிறது. தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறடி பாயும் என்பார்கள். அதனை இவரது வாரிசுகள் நிரூபித்துள்ளனர்.

## பொதுநலப்பணிகள்

1961ல் தொடக்கத்தில் இவர் லாரி உரிமையாளராக இருந்தபோது, குவாரி உரிமையாளரிடம் வாடகை பெறும் முறையை ஒழித்து லாரி உரிமையாளர்களிடம் நேரிடையாக வாடகை கிடைக்கும் முறையைக் கொண்டு வந்தார். துணிச்சலாக முடிவெடுத்து இடையூறுகளை உடைத்தெறிந்து தன்னம்பிக்கையுடன் போராடினால் கொண்ட இலக்கை நிச்சயம் அடைய முடியும் என்பதற்கு முன்னுதாரணமாக வாழ்ந்தார். இதனால் இவர் மீது நம்பிக்கை கொண்ட பிற லாரி உரிமையாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பொதுக் குழுவின் மூலம் 1970ல் திருச்சி லாரி உரிமையாளர் மாவட்டச் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். 1982ல் அச்சங்கத்தின் சார்பில் அறக்கட்டளை ஒன்றை உருவாக்கி அதன் சார்பில் காவேரி திருமண மண்டபம் கட்டினார். அதே நேரம் பஸ் உரிமையாளராகவும் இருந்ததால் தமிழ்நாடு பஸ் உரிமையாளர் சங்கத்தில் மாநிலத் துணைத்தலைவராகவும் பலரின் வேண்டுகோளை ஏற்றுப் பொறுப்பு வகித்தார். 1995ல் கட்டுமானத் தொழில் செய்ததால் அதன் ஆயுட்கால உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தார். இதனால் எல்லாப் பிரிவினரோடும் இணக்கமாக வாழ்ந்தார். மாற்று சமுதாய மக்களாலும், மதிக்கப்பட்டவராக இருந்தார். பிற சமுதாய மக்களிடத்திலும் நேசமும், நெருக்கமும் கொண்டிருந்தார்.

1995ல் திருச்சி மாவட்ட ரெட்டி நலச்சங்கம் தொடங்கி வைத்து அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உடன் தனது கட்டிடத்திலேயே ஓராண்டு வரை எந்தவிதமான வாடகையும் இல்லாமல் அனுமதி வழங்கி மிகச்சிறப்பாக நடைபெற வழிவகுத்தார். பின்னர் இதனைத் தொடர்ந்து மாநில அளவில் ரெட்டியார் சமுதாயத்திற்கென ஓர் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என, திருச்சி மாவட்ட ரெட்டி நலச் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியது. அதன்படி 1996ல் தமிழ்நாடு ரெட்டி நலச்சங்கத்தை உருவாக்கியவர் KRT அவர்களே. பின்னர் 2001ம் ஆண்டில் மறு சீரமைப்பு செய்யப்பட்டு தமிழ்நாடு ரெட்டி நலச் சங்கத்தின் தலைவராகவும் பொறுப்பேற்றார். அதுசமயம் திருச்சியில் காவேரி மகளிர் கல்லூரியின் மைதானத்தில் பிற சமுதாயங்களும் திரும்பிப் பார்க்கும் வகையில் தமிழ்நாடு ரெட்டி நலச்சங்க முதல் “ மாநில மாநாட்டை” நடத்திக் காட்டினார். KRT அழைக்கிறார் என்றவுடன் ஒரு லட்சத்திற்கும் அதிகமானவர்கள் இதில் கலந்து கொண்டு புத்துணர்ச்சி பெற்றனர் என்றால் அது மிகையாகாது. இவரது காலத்தில் தான் மாவட்டங்கள் தோறும் ரெட்டி நலச் சங்கக் கிளை அமைப்புகள் தொடங்கப்பட்டன. சங்கம் கிராமங்கள் தோறும்

வேரூன்றி வளர்ந்து வந்தது. இந்த சமூகத்தில் இருந்த ஜாதிச் சான்றிதழ் பிரச்சனைகளுக்கும், OBC பிரச்சனைகளுக்கும் தீர்வு காண முற்பட்டவரும் இவரே. பல்வேறு மாவட்டங்களில் கிளை அமைப்புகளை உருவாக்கியதோடு ஆங்காங்கு திருமண மண்டபங்கள் உருவாக அடிக்கல் நாட்டியதும், திறந்து வைத்ததும் இவரே. இவரது தலைமையின் போதுதான் அனைத்து உத்திகளையும் பயன்படுத்தி வலுவான அறக்கட்டளையை உருவாக்க முயற்சி செய்தார். சிலரின் ஒத்துழைப்பு மனப்பூர்வமாக இல்லை என்பதை உணர்ந்து மனமுடைந்து போனார். இருந்தும் இன்றைய உன்னத நிலைக்குக் கொண்டு வந்தவர் இவரே.

## கல்விப்பணி

இளம் வயதில் ஆரம்பப்பள்ளியோடு தனது கல்வியை நிறுத்திக்கொண்ட இவர், தினமும் அனுபவ அறிவைப் பக்குவப்படுத்திக் கொண்டு தைரியமாக வாழ்ந்தார். பள்ளிப்படிப்பை விடுத்த பின்னரும் நூல் வாசிப்பை அவர் அன்றாடப் பழக்கமாகவே ஆக்கிக்கொண்டார். தனக்குக் கிடைத்த ஓய்வு நேரங்களில் பலவகையான புத்தகங்களைத் தேடித்தேடி வாங்கிப் படித்தார். திருச்சி சேவா சங்கம் நடத்திய பள்ளியில் பயின்ற ஏராளமான மாணவிகளுக்குக் கல்வி உதவி, உணவு, உடை, உறையுள் என ஆண்டுதோறும் ஜாதி, மதம், மொழிகளைக் கடந்து நூற்றுக்கணக்கான ஏழைக் குழந்தைகளுக்கு நிதி உதவியைத் தன் வாழ்நாள் முழுவதும் செய்தார். இதனால் பல ஏழை, எளிய குழந்தைகள் கல்வி பெற்றனர். காவேரி மகளிர் கல்லூரியில் பலதரப்பு ஏழை மாணவிகளும் இவரது உதவியைப் பெற்று வாழ்வில் முன்னேற்றம் கண்டுள்ளனர். மகிழ்ச்சி அடைவதற்கு வழி மற்றவர்களையும் மகிழ்ச்சி கொள்ளச் செய்வதே என எண்ணிய இவர் பலபேருக்கு முழு கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் எனப் பலவாறு உதவிகள் புரிந்தார். பொறாமையின்றிப் பெருந்தன்மையாக நீயும் வாழ்ந்து, பிறரையும் வாழவிடு என்ற கொள்கையை மனதில் நிறுத்தி தனது கல்விச் சேவையைத் தனது இறுதிநாள் வரை ஏழை மாணவர்களுக்கு வழங்கினார். 17.10.1984ல் காவேரி மகளிர் கல்லூரியை ரெட்டி கல்வி அறக்கட்டளை மூலம் உருவாக்கியதில் பெரும்பங்கு இவருக்கு உண்டு. 5.30 ஏக்கரில் திருச்சியின் மையப் பகுதியில் செயல்பட்டு வரும் காவேரி மகளிர் கல்லூரி படிப்படியாக வளர்ந்து இன்று 5800 மாணவிகளைக் கொண்ட தன்னாட்சிக் கல்லூரியாக வளர்ந்திருப்பதற்கு இவரின் பங்கு மகத்தானது.

## தொழிலாளிகளை முதலாளி ஆக்கி அழகு பார்த்தவர்

தன்னிடம் ஓட்டுநராகப் பணிபுரிந்த தொழிலாளர்கள் புதிதாக மோட்டார் தொழில் தொடங்க விருப்பம் தெரிவித்தபோது

அவர்களைப் போட்டியாளர்களாகக் கருதாமல் நல்ல பல ஆலோசனைகளை வழங்கி, நிதி உதவியும் செய்தவர். தான் பெற்ற அனுபவத்தைக் கொண்டு அவர்களும் சாதனை படைக்க ஊக்கமும், உற்சாகமும் தரும் உத்தமராக வாழ்ந்தவர். யார் எந்த தொழில் துவங்கினாலும் அவர்களுக்குத் தாரக மந்திரமாக அவர் சொன்னது நேர்மை, நாணயம், கடின உழைப்பு, காலம் தவறாமை இவையனைத்தும் அவசியம் இருக்கவேண்டும். அவ்வாறு நடத்தால் அத்தொழிலில் நிச்சயம் வெற்றி பெற முடியும் என்ற தனது அனுபவத்தைப் பகிர்ந்தவர். தன்னிடம் பணிபுரிந்த லாரி ஓட்டுநர்கள் தங்களது சேமிப்புக்கு ஏற்ப மீதித் தொகையை KRT பைனான்ஸ் மூலம் குறைந்த வட்டியில் நிதி உதவி வழங்கி, சொந்தமாக லாரி வாங்க உதவி புரிந்து அவர்களை முதலாளி ஆக்கி அழகு பார்த்தார். இதனால் இன்றும் பல லாரிகள் **“KRT”** என்ற பெயரில் ஓடுவதைக் காணலாம்.

## ஆன்மீகப்பணி

சிறுவயதில் துன்பங்கள் தொடரும்போது தான் பணியாற்றிய இடத்திற்கு அருகில் இருந்த திருச்சி உப்புப்பாறை கிறித்தவ கோயில் திடலில் இருந்த தெய்வத்திடம் தான் படும் கஷ்டங்களை முறையிட்டு வணங்கி வந்தார். இவர் லாரி ஓனர் என்ற அந்தஸ்தை அடைந்த நாள் முதற்கொண்டு ஒவ்வொரு புது லாரி, பஸ் வாங்கும் போதும் சமயபுரம் மாரியம்மனுக்கு பூஜை செய்து நம்பிக்கையோடு தொழிலை நடத்தினார். அக்கோவில் திருப்பணிகளுக்கு உதவுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அதேபோல் ஆண்டுதோறும் திருப்பதி ஏழுமலையானுக்குத் தவறாமல் முடி காணிக்கை செலுத்தியும் வந்தார். தான் வளர்ந்த மண்ணான தாத்தையங்கார்பேட்டையில் உள்ள சிவன் கோயில் மற்றும் பிடாரி கோயில் திருப்பணிகளுக்கு நன்கொடை வழங்கி உதவினார். அதே போல் கொளக்குடி காமாட்சி அம்மன் கோயில்களுக்கும், வயலூர் முருகன் கோயிலுக்கும் பல காலகட்டங்களில் நிதி உதவி செய்து வந்தார். திருச்சி திருவானைக்கோவில் அறங்காவலர் குழுவில் உறுப்பினராக இருந்து ஆன்மீகப் பணியாற்றியவர். கோயில் திருப்பணிகளுக்கு இல்லையென்று சொல்லாமல் நிதி உதவி செய்தவர்.

## ஓய்வு நேரப்பணிகள்

ரெங்கராஜன் நாள்தோறும் புத்தகங்கள், பத்திரிக்கைகள் படிப்பதை வழக்கமாகக் கொண்டவர். எதிரிகளால்தான், தன் முன்னேற்றம் ஏற்பட்டது என்று எண்ணும் குணம் கொண்ட இவர், எதிரிகள் வந்து கேட்டாலும் அல்லது எதிரிகள் படும் துன்பத்தை அறிந்தாலும் உடன் சென்று உதவுவது இவரது இயல்பான செயல் என இவரை அறிந்த நண்பர்கள் பலரும் பாராட்டி உள்ளனர். நியாயம்

என்று தெரிந்து செய்யும் செயல்களினால் தொந்தரவு வந்தாலும் விடாப்பிடியாக நியாயத்திற்காகப் போராடும் போர்க் குணம் கொண்டவர். பொய் பேசத் தெரியாத வெள்ளந்தி உள்ளம் கொண்ட எளிமையான தோற்றம் கொண்டவர். வெள்ளை மனம் கொண்ட யதார்த்தவாதி, அகங்காரம் இல்லாத தாராள மணம் கொண்ட இவரது குணமும், எதையும் மறப்போம் மன்னிப்போம் என்ற பண்பும் இவரை மாபெரும் மனிதராக்கியது. ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்து அந்த அடையாளம் உருமாறி ஆரம்பத்தில் ஒரு தொழிலாளியாக மாறி காலத்தின் வேகத்தில் ஒரு தொழிலதிபராகத் தன்னை உயர்த்திக் கொண்டவர் ரெங்கராஜன். கடந்த 01.02.2019 அன்று தனது 85வது வயதில் ஓமந்தூர் P. ராமசாமி ரெட்டியார் அவதரித்த நாளில் ரெங்கராஜன் (KRT) இந்த மண்ணுலகத்தை விட்டு மறைந்தார். இவரது வாழ்க்கை இன்றைய வளர் இளம் குழந்தைகளுக்கு வழிகாட்டும் பாடமாய் அமையட்டும். எளிமை கொண்ட இவரின் வாழ்வு, உயர எட்டப்போகும் அனைத்து இளைஞர்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

## கைராசி உள்ளவர்

எந்தத் தொழில் ஆரம்பித்தாலும் ஐயாவை வைத்துத்தான் திறப்பார்கள். இவர் கைபட்டுத் தொடங்கினால் கைராசி என்று தொடங்கி வைப்பார். ஒவ்வொரு வருட ஜனவரி 1ம் தேதி ஐயாவிடம் பலர் ஆசீர்வாதம் வாங்கிச் செல்வர். தீபாவளிக்கு ஒரு வாரத்திற்கு முன்னால் இருந்து தீபாவளிக் காசு வாங்க நிறைய பேர் வருவார்கள். இவர் தொட்டுக் கொடுத்த காசு துலங்கும் என்பது எல்லோருடைய நம்பிக்கையாகும்.

